மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இப்போது நெரிசல் பகுதிகளில் மட்டும் சீரணித் தொண்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக 50 இடங்களில் அவர்கள் பயன்படுத்தப்படு கிறார்கள். அதை மேலும் 25 இடங்களுக்கு கூடுதலாக்கும் யோசனை போக்குவரத்துத் துறையின் பரிசீலனையில் உள்ளது.

சென்னை-போரூந்தவாக்கம் பேருந்துகள்

*352 வினா—திரு கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வழித்தடம் எண் 113 (சென்னை-போரூந்தவாக்கம்) பேருந்துகளை தேர்வாய் வரை சென்று திரும்புமாறு செய்வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: வழித்தடம் எண் 113-A (தங்கசாலை-போரூந்தவாக்கம்) செல்லும் பேருந்துகள் 19—6—1972 முதல் காலையில் ஒரு முறையும் மாலையில் ஒரு முறையும் தேர்வாய் கிராமம் வழியாகத் திருப்பிவிடப்பட்டுள்ளன.

திரு கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்த 113-A பேருந்து கள் காலையில் ஒரு முறையும், மாலையில் ஒரு முறையும் தான் தேர்வாய் கிராமம் வழியாகச் செல்லவேண்டுமா? அந்த வழியே செல்லும் எல்லாப் பேருந்துகளையும் தேர்வாய் கிராமம் சென்று வருவதற்கு உடனடியாக அரசு ஆணைப் பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: போதுமான பயணிகள் இருப் பார்களேயானால் அதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

Temple Lands in Madras

*353. *Q.*—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether lands of the temples at Madras City have been given to the State Slum Clearance Board; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) ஒரு விவரப் பட்டியல் [a]அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு அ. தேவேந்திரன்: தலைவரவர்களே, ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தருவதற்காக குடிசை மாற்று வாரியத்திற்கு தரப்பட்ட நிலங்கள் மிகவும் குறைந்த விலைக்குத் தரப்பட்டதாகச் சொல்கிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா?

[a]526—527-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கோவில் நிலங்கள் கிரௌண்டு ஒன்றுக்கு 2,850 என்ற விலைக்கு விற்றிருக்கிறோம். இன்னும் கொஞ்சம் அதிகமான விலைக்குப் போகும் என்றாலும், அறங்காவலர்களும், குடிசை மாற்று வாரியத்தினரும் கூடிப் பேசித்தான் இந்த விலையை நிர்ணயம் செய்தார்கள். அந்தப் பகுதியில் குடிசை போட்டுக் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்த மக்களிடமிருந்து ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ரூபாய் வாடகை வசூலைப் பெற முடியாமல் பல ஆண்டு காலம் தேங்கி நின்றது. இப்படி விற்றுவிடுவதன் மூலம் அதிகப்படியான வருமானம், சுமார் 30,000 ரூபாய் ஆண்டு தோறும் அதிகமாகக் கிடைப்பதால், அந்த நிலங்களைக் கொடுப்பதற்கு கபாலீஸ்வரர் கோவில், மற்றும் கோவில்களும் சம்மதித்து இருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இனிமேலாவது இப்படிக் குறைவான விலைக்கு கோவில் நிலங்களை விற்காமல், மற்ற தனியாரிடமிருந்து ஆர்ஜிதம் செய்தால் எப்படிக் கொடுப்பார்களோ, அது போல் கோவில் நிலங்களுக்கும், அதன் வருமானத்தை பாதிக்காமல் இருக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஏழை மக்கள், குடிசை வாழ் மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்காகத்தான் இந்த நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே வந்த வருமானத்தை விட அதிகமான வருமானம் இந்தக் கோவில்களுக்கு வருவதற்கு வழி வகை செய்து கொடுத்த பிறகுதான் அரசாங்கம் இந்தச் செயலில் இறங்கி இருக்கிறது. மேலும் இப்படிப்பட்ட நிலங்களை ஏழை மக்களின் உபயோகத்திற்காக அளிப்பதற்கு அரசு தயங்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

* 354. *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any land belonging to the Kapaleeswarar temple has been rented out to the P.S. High School, Mylapore, Madras ; and

(*b*) if so, the details thereof

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) சென்னை, மைலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான ஆர். எஸ். எண். 3543/1-ல் உள்ள மூன்று காணிகள் பத்து கிரவுண்ட் மற்றும் 246 சதுர அடி நிலம், கரஸ்பாண்டெண்ட், மயிலை, பி. எஸ். உயர்நிலைப் பள்ளிக்குக் குத்தகைக்கு 1937-ல் இருபத்தொரு ஆண்டுகளுக்கு விடப்பட்டது. இக்குத்தகை மீண்டும் 1—5—1958 முதல் மாத வாடகைக்கு ரூ. 500 வீதம் 21 வருடங்களுக்கு புதுப்பிக்கப்பட்டுள்ளது.